முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

## ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

குரோதி வருடம் சித்திரை மாதம் 29 திகதி முதல்
குரோதி வருடம் வைகாசி மாதம் 06 திகதி வரை
(12.05.2024 ஞாயிறு முதல் 19.05.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அன்னதான சேவை ஆற்றி
   அனைவருள்ளும் தயவு பிறக்க
   மன்னவனாய் அருளும் அரங்கா
   மகானே உன்னை போற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷியும்
   புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
   ஆற்றல்பட குரோதி தகர்திங்கள் இருபான்நவ திகதிமேல்
   அறிவிப்பேன் விடைதிங்கள் சஷ்டி திகதிவரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசி
   உரைத்திடுவேன் அரங்கன் கேட்க
   உண்மை வழி தருமவழி மறந்து
4. மறந்து கயமை வஞ்சம் கையூட்டு
   மாயை தலைமை அதிகாரமென
   சிறந்திடா அறிவு ஞானமின்றி
   செயல்களில் சுயநலம் என்று கூடியதோ
5. கூடிட அன்றே இயற்கை பொய்த்து
   குளறுபடி பருவங்களில் மாறி
   நாடுமே மிகுவெப்பம் பிணிசோடை
   நன்மையிலாச் சூழல் கூடும்

6. கூடுகின்ற நிலைகளும் மாறி
குறிப்பாக இந்தியா தமிழகத்தில்
நாடெங்கிலும் பருவம் தவறா
நல்மழை வருஷிக்க இயற்கை மகிழ
7. மகிழவே ஆளுமை சக்திகள்
மக்களிடை இறங்கி சேவை
மகிழவே தருமப்பணிகளாகச் செய்து
மண்ணும் மக்களும் மனம் குளிர
8. குளிரவே தருமசேவை ஆற்ற
குறைவிலா மாற்றங்களாகி
தெளிவு திடம் நிரம்பிட மாற்றம்
தெய்வ பலமாக மாறி இனிதே
9. இனிதே இந்தியா தமிழகம்
எல்லா பாதுகாப்பும் பெறும்
இனிவரும் காலம் வளர்ச்சி பணிகளாகி
எல்லா வகையும் தேறியே
10.தேறியே குருமார்க்கம் சன்மார்க்கம்
திளைக்க உலகே வியக்க
மாறுதலாய் இந்தியா தமிழகம்
மண்ணுலகில் கண்டு நிலைஉயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

குரோதி வருடம் சித்திரை மாதம் 29 ம் நாள் 12.05.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் வைகாசி மாதம் 06ம் நாள் 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்களுடைய உள்ளத்தில் தயவு உணர்வை பெருக்கி அவர்களை தயவு உடையவர்களாக ஆக்கிடவே எல்லையில்லாது அன்னதானங்களை செய்து தர்மபலம் பெருக்கி உலகை காக்க வழிவகை செய்கின்ற வள்ளலே மகானே ஞானியே அரங்க மகானே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் உலக நலம் கருதி குரோதி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள்

**12.05.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் வைகாசி மாதம் **06**ம் நாள் **19.05.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்களை காப்பேன் என உறுதி எடுத்து பின் உண்மை வழி நடக்காமலும் தருமத்தின் பாதையை மறந்தும் களவு செய்தும், வஞ்சகம் செய்தும், லஞ்சம் வாங்கியும் பாவ புண்ணியம் மறந்து மாயையுள் அகப்பட்டு பொருள் சேர்ப்பதை சிறந்த அறிவு என்று மயங்கி தலைமை வகித்தும், மக்களிடம் அதிகாரம் செலுத்தியும் வஞ்சித்து வாழுகின்ற நிலை என்று நாட்டினில் உருவாகியதோ அன்றே இயற்கை பொய்த்து போகும் நிகழ்வுகள் உருவானதப்பா அன்று முதலே பருவங்கள் மாறி மாறி செயல்பட துவங்கியதப்பா. பருவ மாற்றங்களினாலே நாடெங்கிலும் மிகு வெப்பமும், மிகை மழையும் உண்டானதப்பா.

ஆள்பவர்களின் மயக்கம் அதிகமானால் மாயை அதிகமானால் மிகு வெப்பமும் அதன் விளைவால் நோய்களும் துன்பங்களும் அதிகமாகுமப்பா ஆதலினாலே இத்தகைய முரண்பாடான சூழ்நிலைகள் மாற வேண்டுமாயின், பருவமழை பருவம் தவறாமல் பெய்திட வேண்டுமாயின் ஆள்பவர்கள் மக்களுக்காக மக்களிடையே இறங்கி சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு தருமங்களை தாராளமாய் செய்து மக்கள் மனம் குளிர நடந்து கொண்டால் எந்தவித குறைகளும் இல்லாமல் மாற்றங்கள் விரைந்து உருவாகி தெய்வபலமும் தர்மபலமும் நாட்டினில் அதிகமாகி நமது தேசம் தக்க பலம் பெற்றிடுமப்பா. இயற்கை பாதுகாப்பையும் பெற்றிடும்.

நாட்டினில் இனிவரும் காலமெல்லாம் வளர்ச்சி பணிகள் அதிகமாகிடும், எல்லாவிதமான முன்னேற்றமும் உண்டாகி சன்மார்க்கமும் அதிகமாகி உலகமே வியக்குமாறு மேம்பட்ட நிலையை அடைந்து சிறக்கும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—